## இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கை சபை – 2016

---

இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கை சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 47 ஆம் இலக்க இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கை சபை அதிகாரச்சட்டத்தின் 18(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை, இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கை சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் மூலம் தேவைப்படுத்தப்படுகின்ற அல்லது அனுமதி வழங்கப்பட்டவைகள் தவிர்ந்த சொத்துக்களும் பொறுப்புக்களும், வருமானங்களிலும் செலவினங்களிலும் ஈடுசெய்யப்பட முடியாதிருந்த போதிலும், நடைமுறைச் சொத்துக்களுக்கு எதிராக ரூபா 73,089 தொகையான நடைமுறைப் பொறுப்புக்கள் ஈடுசெய்யப்பட்டு தேறிய பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

(i) நியமத்தின் 69 ஆவது பிரிவின் பிரகாரம் சொத்தொன்றைப் பெறுமானத் தேய்வு செய்தல், அது பயன்பாட்டிற்கு தயார்படுத்தப்பட்ட நிலைக்குக் கொண்டுவந்ததன் பின்னர் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனக் காண்பிக்கப்பட்டிருந்தும் கவனத்தில் கொள்ளப்பட்ட வருடத்தின் திசெம்பர் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு செய்யாமை சபையின் பெறுமானத் தேய்வுக் கொள்கையாக இருந்தது.

(ii) நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயபன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யாமையின் காரணமாக ரூபா 20,675,030 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டிதுந்தும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறுமானத்தேய்வு விகிதத்தை மதிப்பீடு செய்தபோது ஏற்பட்ட வழுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் படி மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணிப்பீட்டு வழுவின் காரணமாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கணனி மென்பொருள்களுக்குரிய பெறுமானத்தேய்வு ரூபா 206,244 குறைவாகவும், 07 சொத்து விடயங்கள் பாவனைக்கு எடுத்த திகதி முதல் பெறுமானத்தேய்வு செய்யப்படாமையினாலும் மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு ரூபா 17,677 குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பணிக்கொடை ஒதுக்கீட்டு பட்டோலையின் பிரகாரம் மீதி ரூபா 6,609,102 ஆக இருந்ததுடன் நிதிநிலைமைக் கூற்றின் பிரகாரம் மீதி ரூபா 8,314,850 ஆனமையால் ரூபா 1,705,748 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 2,434,932 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,594,269 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிவிளைவுகளில் ரூபா 1,159,337 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் தொடர்பாடல் செலவினம் ரூபா 584,236 இனாலும், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் செலவினம் ரூபா 362,265 இனாலும் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையும் தேறிய நட்டமொன்று ஏற்பட்டிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் பின்னர் தேறிய இலாபம் ஏற்பட்டிருந்தது. எனினும், 2015 ஆம் ஆண்டில் ரூபா 3,594,269 தொகையான தேறிய இலாபம் மீளாய்வாண்டின் போது ரூபா 2,434,932 வரை குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவில் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கும் போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 16,607,312 தொகையான நிறுவகத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டில் ரூபா 31,304,479 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1987 இன் 47 ஆம் இலக்க இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைச் சபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பொருளாதார ரீதியாகவும், வினைத்திறனாகவும், சூழலுக்கு இசைவானதாகவும் மற்றும் சமூகரீதியாகவும் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற, வலுவான உள்ளக நிறுவக ஒத்துழைப்புடன்கூடிய கமத்தொழில் ஆராய்ச்சி ஊடாக கைத்தொழில் பிரிவின் வினைத்திறன், இலாபகரமானதாகவும் நிலைபேறானதாகவும் உள்ளதை உறுதிப்படுத்துதல் மற்றும் தேசிய உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்பன சபையின் பிரதான பணியாக இருந்த போதிலும், அந்த பணிகளை நிறைவேற்றுவதற்காக தேவையான நிதி ஏற்பாடுகள் உரிய நேரத்தில் வழங்கப்படாமையினால் அந்த பணிகளை போதியளவில் நிறைவேற்றுவதற்கு முடியாதுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஆராய்ச்சி மானியமாக ரூபா 8,796,700 தொகை கிடைத்திருந்ததுடன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்டிருந்த 13 நிகழ்ச்சித் திட்டங்களுக்கிடையே 04 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் தேசிய கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கை முன்னுரிமையை இனங்காணுதல், தேசிய கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கை மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான செயலாற்றலும் மீளாய்வும், கமத்தொழில் ஆராய்ச்சி செயற்பாடுகளின் நம்பிக்கைத் தன்மையை

கட்டியெழுப்புவதற்கான வசதிகளை வழங்குதல், நிறுவனங்களுக்கிடையில் கமத்தொழில் ஆராய்ச்சி செயற்திட்டத்திற்கான செயற்பாடுகளை வழங்குதல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக செயல்முன்னேற்றம் 39, 23, 25 மற்றும் 33 சதவீதங்களாக மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தின் போது மூன்று சந்தர்ப்பங்களில் பெறுகை வழிகாட்டிகள் பின்பற்றப்பட்டு நிறுவனத்திற்குத் தேவையான 01 Fax Machine, 01 பல்லூடக அலகு (Multi Media Projector) மற்றும் 01 நிழற்பட பிரதி இயந்திரம் (Photo Copy Machine) என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கு 3 சந்தர்ப்பங்களின் போது ரூபா 338,670 கூட்டுமொத்தமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் இந்த இயந்திரங்களின் கொள்வனவுத் திட்டங்களுடன் கிரயம் மற்றும் காலத்தைக் குறைக்கும் வகையில் ஒரே தடவையில் கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**4.3 பதவியணியினர் முகாமைத்துவம்**

சபையின் பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி முகாமைத்துவம்) பதவி 2013 ஆம் ஆண்டிலிருந்தும் இணையதள கட்டுப்பாட்டாளர் பதவி அப்பதவி தாபிக்கப்பட்ட தினமான 2014 பெப்ரவரி 26 ஆந் திகதியிலிருந்தும் வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும், கணக்காய்வுத் திகதியான 2017 மே 30 ஆந் திகதி வரையிலும் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட 36 விடயங்களின் செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பீடு செய்த போது 20 சதவீதம் முதல் 1939 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| | ------------------------------------------------------- | ----------------------------- |
| (அ) | ஊழியர் நிர்வாகம் | ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு இணங்காமை |
| (ஆ) | பெறுகைச் செயற்பாடுகள் | முறையான பிரகாரம் தயாரித்தல், அமுல்படுத்துதல், கிரயம் மற்றும் காலத்தைக் குறைக்கும் வகையில் திட்டமிடப்படாமை. |
| (இ) | நிதிக் கட்டுப்பாடு | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பின்பற்றப்படாமை |
| (ஈ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | விவசாயத் துறைகளுக்குரிய பிரச்சினைகளுக்கு தீர்வாக வெற்றிகரமான ஆராய்ச்சிகள் அமுல்படுத்தப்படாமை. |